Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 88 · வியாழக்கிழமை Thursday · 29.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# வலுவான அடித்தளங்களுடன் நாடு முன்னேறி வருகிறது

## நாடாளுமன்ற கூட்டு கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரை



புதுடெல்லி: வலுவான அடித்தளங்களுடன்நாடு முன்னேறி வருவதாக குடியரசு தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார். அரசின் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் பலன்கள் 95 கோடி இந்திய குடிமக்களுக்கு கிடைப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றபட்ஜெட் கூட்டத் தொடர், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் உரையுடன் இன்று தொடங்கியது. இந்த ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால்,நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்தினார். குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், இரு அவைகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள்,மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது உரையில், நாடாளுமன்றத்தின் இந்த கூட்டத்தொடரில் உரையாற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவுக்கு விரைவான முன்னேற்றத்தை அளித்த மறக்க முடியாத ஆண்டாக கடந்த ஆண்டு இருந்தது. வந்தே மாதரத்தின் 150-வது ஆண்டு நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இந்த பாடலை எழுதிய பக்கிம் சந்திர சாட்டர்ஜிக்கு, நாட்டுமக்கள் மரியாதை செலுத்துகின்றனர். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒரு சிறப்பு விவாதம் நடத்தப்பட்டது.அதற்காக அனைத்துநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து க்கொள்கிறேன்.

ஸ்ரீ குருதேஜ் பகதூரின் 350-வதுதியாகதினத்தை அரசு நினைவுகூர்ந்து விழா எடுத்தது. இதேபோல், பிர்சா முண்டாவின் 150-வது பிறந்த நாளில் நாடு அவருக்கு அஞ்சலி செலுத்தியது. பழங்குடி சமூகத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை நாடு நினைவு கூர்ந்தது. சர்தார் வல்லபாய் படேலின் 150-வது பிறந்தநாள் தொடர்பான நிகழ்வுகள், ஒரே நாடு உன்னத நாடு என்ற உணர்வை மேலும் வலுப்படுத்தியது.

பாரத ரத்னா பூபன் ஹசாரிகாவின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் நாட்டை எவ்வாறு இசையாலும் ஒற்றுமை உணர்வாலும் நிரப்பின என்பதை முழு நாடும் கண்டது. நாடு தனது முன்னோர்களை நினைவுகூரும்போது, புதிய தலைமுறைக்கு உத்வேகம் கிடைக்கிறது. இது வளர்ச்சி அடைந்த இந்தியாவை நோக்கிய நமது பயணத்தை மேலும் வேகப்படுத்துகிறது.

இந்த நூற்றாண்டின் முதல் 25 ஆண்டுகள், இந்தியாவுக்கு பல வெற்றிகள், பெருமைக்குரிய சாதனைகள், அசாதாரண அனுபவங்கள் ஆகியவற்றால் நிறைந்ததாக இருந்துள்ளது. கடந்த 10-11 ஆண்டுகளில்,இந்தியாஒவ்வொரு துறையிலும் தனது அடித்தளத்தை வலுப்படுத்தி உள்ளது. நாட்டில் சமூக நீதி நிலைநாட்டப்பட அரசு உறுதிபூண்டுள்ளது. மத்திய அரசின் சமூக பாதுகாப்பு திட்டத்தின் பலன்கள் இப்போது ஏறத்தாழ 95 கோடி இந்திய குடிமக்களுக்குக் கிடைக்கின்றன. மத்திய அரசு பல்வேறு சாதனைகளைப் புரிந்து வருகிறது. இந்தியாவில் தற்போது 150 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன'' என தெரிவித்தார்.

# கிண்டியில் குழந்தைகளுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை:

## முதலமைச்சர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்



சென்னை: கிண்டி, கிங் நோய்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.417.07 கோடி மதிப்பில் குழந்தைகளுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டிடத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 2024-25-ம் ஆண்டுக்கான சுகாதாரத்துறை மானியக் கோரிக்கையில், தென் சென்னை பகுதிகளில்குழந்தைகளுக்கான உயர்தர சிறப்பு மருத்துவ சிகிச்சைமற்றும்சேவைகளை வழங்க சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் மேம்பட்ட மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் அதிநவீன வசதிகள் கொண்ட குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை நிறுவப்படும் என்றுஅறிவிக்கப்பட்டது.


அதன்படி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகம் சார்பில் சென்னை, கிண்டி, கிங் நோய்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 6.5 ஏக்கர் நிலப்பரப்பில், 4,63,544 சதுர அடி பரப்பளவில் ரூ. 417.07 கோடி மதிப்பில் கட்டப்படுகிறது. இக்கட்டிடத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்த உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், நோயுற்ற குழந்தைகளுக்கு சிறப்புப்பிரிவு,குழந்தைமருத்துவப்பராமரிப்புசேவைகளை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும், குழந்தை மருத்துவக் கல்விக்கு ஆதரவளிக்கவும், ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், மேலும் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடன் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பை எளிதாக்கவும் உதவும்.

நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், சுகாதாரத்துறை செயலர் ப. செந்தில் குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் எ. அருண் தம்புராஜ், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலை. துணைவேந்தர் டாக்டர் நாராயணசாமி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் சுகந்தி ராஜகுமாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# விமான விபத்தில் அஜித் பவார் மரணம்; அடையாளம் காணப்பட்ட உடல் வெளியான சி.சி.டி.வி. காட்சியால் அதிர்ச்சி






சென்னை,

மராட்டிய மாநிலம் புனேமாவட்டத்தில் நடைபெற இருந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக, அந்த மாநிலத்தின்துணைமுதல்-மந்திரி அஜித்பவார்சிறிய ரகதனி விமானத்தில் சென்று கொண்டிருந்தார். இந்நிலையில் பாராமதி பகுதி அருகே தரையிறங்க முயன்றபோது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு எதிர்பாராத விதமாக விமானம் விழுந்து நொறுங்கி விபத்திற்கு ள்ளானது. விபத்தில் சிக்கிய விமானம் உடனடியாக தீப்பற்றி எரியத் தொடங்கியது. காலை 8.45 மணியளவில் நடந்த இந்த கோர விபத்தில் அஜித் பவார் உள்பட,விமானத்தில் பயணித்த அவரது பாதுகாவலர்கள் 2 பேர் மற்றும் விமானிகள் 2 பேர் என மொத்தம் 5 பேர் உயிரிழந்ததாக விமானத்துறை இயக்ககம் அறிவித்துள்ளது. இந்த விபத்தில் உயிரிழந்த அஜித் பவார் உள்ளிட்ட அனைவரின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு,பிரதமர் மோடி, தமிழக முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். மேற்கு வங்க முதல்-மந்திரி மம்தா பானர்ஜி தனது இரங்கல் செய்தியில், இந்த விமான விபத்து குறித்து முறையான விசாரணை தேவை என வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில்,விபத்து தொடர்பான சி.சி.டி.வி. காட்சிவெளியாகிஅதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விமானம் தரையில் விழுந்து நொறுங்கி வெடித்து சிதறும் காட்சி அதில் பதிவாகி உள்ளது.

இதற்கிடயில், உயிரிழந்தஅஜித்பவாரின் உடல் அடையாளம் காணப்பட்டுள்ளதாகதகவல் வெளியாகியுள்ளது.

கைக்கடிகாரம், ஆபரணங்கள் உள்ளிட்ட பொருட்களை வைத்து உடல்கள் அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்து நடந்த இடத்தில் மத்திய விமானப்போக்குவரத்துத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அதே சமயம், துணை முதல்-மந்திரி அஜித் பவார் உயிரிழந்ததை தொடர்ந்து மாநிலத்தில் 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என மராட்டிய மாநில அரசு அறிவித்துள்ளது. ஆரம்பக்கட்ட விசாரணையில், பாராமதி பகுதியில் நிலவிய அடர்ந்த பனி மூட்டம் மற்றும் தரையிறங்கும் போது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு ஆகியவற்றின் கலவையேவிபத்துக்குக் காரணமாக இருக்கலாம் எனப் புள்ளி விபரங்களுடன் கூடிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்தத் துயரச் சம்பவம் குறித்து விமான விபத்து விசாரணைப் பணியகம் மற்றும் பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகம் ஆகியவை முழுமையான விசாரணையைத் தொடங்கியுள்ளன. விபத்துக்கான சரியான காரணத்தைக் கண்டறிய உயர்மட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு, தீவிர விசாரணை நடந்து வருகிறது. இந்த உயிரிழப்புச் செய்தி வெளியானதை அடுத்து, நாடு முழுவதும் உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

நாட்டின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான அஜித்பவாரின் மறைவுக்கு மரியாதை செலுத்தும்விதமாக,மகாராஷ்டிரா அரசு மூன்று நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்றும், விபத்துக்கான காரணம் விரைவில் கண்டறியப்பட்டு வெளியாகும் என்றும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்** DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஒரே நாளில் 2வது முறையாக தங்கம் விலை அதிரடியாக உயர்வு...



தங்கம்,வெள்ளிவிலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருக்கிறது. தினமும் புதிய உச்சம் என்ற பாணியில் அதன் விலையை கேட்டாலே விழிபிதுங்கும் நிலை உள்ளது.அதிலும் கடந்த ஒரு வாரமாக இரண்டும் போட்டிப்போட்டு உயர்ந்து வருவதை பார்க்க முடிகிறது. அந்த வகையில் சமீபநாட்களாக காலை மற்றும் பிற்பகல் என 2 நேரங்களில் விலை மாற்றம் இருந்து வருகிறது.

காலையில் தங்கம் விலை கிராமுக்கு ரூ.370-ம்,சவரனுக்கு ரூ.2,960-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.15,330-க்கும்,ஒரு சவரன் ரூ.1,22,640-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் இன்று ஒரே நாளில் தங்கம் விலை 2-வது முறையாகஅதிரடியாகஉயர்ந்துள்ளது.

அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று மாலையில் சவரனுக்கு ரூ.2,240 உயர்ந்து வரலாறு காணாத உச்சத்தை தொட்டு ஒரு சவரன் ரூ.1,24,880-க்கு விற்பனையாகி வருகிறது. கிராமுக்கு ரூ.280 உயர்ந்து ஒரு கிராம் ரூ.15,610-க்கு விற்பனை செய்யப்படுகிறது.இன்று ஒரே நாளில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.5,200 உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வெள்ளி விலையை பொறுத்த வரையில் இன்று மாலையில் எந்த மாற்றமும் இன்றி, ஒரு கிராம் ரூ.400-க்கும், ஒரு கிலோ 4 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் இருந்து கிருஷ்ணகிரி செல்லும் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் உள்ள, வீரியம் பட்டி கூட்ரோடு பகுதியில், தொடர்விபத்துக்கள் நடந்து வருவதால், விபத்தை தடுக்கும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவின் படி, ஊத்தங்கரை டி.எஸ்.பி., சீனிவாசன், தேசிய நெடுஞ்சாலை கிருஷ்ணகிரி டு திண்டிவனம் உதவி செயற்பொறியாளர் நாகராஜன், மற்றும்உதயகுமார்,தமிழ்நாடுநெடுஞ்சாலைதுறைஊத்தங்கரைஉதவிசெயற்பொறியாளர் நேதாஜி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று,சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன செய்வது என்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை கூறினர். பிரிவு சாலை என்பதால் வாகனஓட்டிகள்பாதிக்காவண்ணம்பல்வேறுநடவடிக்கைகள்எடுக்கஅறிவுறுத்தப்பட்டது.

## ஸ்ரீசந்தி விநாயகர் திருக்கோவில் 10ஆம் ஆண்டு வருஷாபிஷேக விழாவை முன்னிட்டு 101 திருவிளக்கு பூஜை நடைபெற்றது



தூத்துக்குடியில் இல்லத்து பிள்ளைமார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீசந்தி விநாயகர் திருக்கோவில் 10ஆம் ஆண்டு வருஷாபிஷேக விழாவை முன்னிட்டு 101 திருவிளக்கு பூஜை நடைபெற்றது. மழை வளம், நாட்டின் ஒற்றுமை, மனித நேயம், அமைதி, தொழில்வளம், பெருகவேண்டும், அனைவருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கை அமைய வேண்டும் ஆகியவற்றிற்காக பஜனையுடன் கூடிய திருவிளக்கு பூஜையை ஜெயந்தி பொய்சொல்லான் தொடங்கிவைத்துபூஜையில் கலந்து கொண்ட பெண்கள் அனைவருக்கும் விநாயகா் சிலையை மாவட்ட திமுக பிரதிநிதி ராஜ்குமாா் மற்றும் விகாசினி வழங்கினாா்கள்.

பின்னர் 28ம்தேதி கனபதிஹோமம், கோபூஜை, நடைபெற்றது. அதனை தொடர்ந்துபார்வதி அம்மன் கோவிலிருந்து பால்குடம் எடுத்தல், கும்பாபிஷேக தீபாராதனை நடைபெற்றன. இரவு மாவிளக்கு ஊர்வலமும், சந்தி விநாயகர் வீதி உலா வருதல் நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன.கோவில்விழாவிற்கான ஏற்பாடுகளை தலைவர் மோகன்,செயலாளர் ரமேஷ், பொருளாளர் கோபாலகிருஷ்ணன், கௌரவ ஆலோசகர்கள் ராஜசபாிநாதன், சுப்ரமணி, உறுப்பினர்கள் மஹாராஜா மணிகண்டன்,சந்தானராஜ், அமிர்தகணேசன்,சிவாகந்தவேல், முருகேசன், செந்தில் ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட திமுக பிரதிநிதி ராஜ்குமாா், 1ம் கேட் காந்தி சிலை வட்டாரவியாபாாிகள் சங்கதுணை செயலாளர் வெங்கடேஷ், துணைத்தலைவர் முருகேசன், பொருளாளர் ரமேஷ், மற்றும் கந்தவேல் உள்பட பலர் கலந்து கொண்டனா்.

## ஊருக்குள் ஒரு புரட்சி; அரசுப் பள்ளி மாணவர் சேர்க்கையை அதிகரிக்க முன்னாள் மாணவர்கள் நூதன முயற்சி!



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த சேப்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில் "ஊருக்குள் ஒரு புரட்சி" என்ற முழக்கத்துடன் நூதன முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பள்ளி தொடங்கப்பட்ட காலம் முதல் 2012-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சுமார் 1000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வந்த நிலையில், தற்போது 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை வெறும் 150 மாணவர்கள் மட்டுமே பயின்று வருவது வேதனைக்குரிய ஒன்றாக மாறியுள்ளது. தனது தாய் பள்ளியின் இந்த நிலையை கண்டு விரக்தியடைந்த முன்னாள் மாணவர்கள்,பள்ளியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற இலக்குடன் 'SSS நண்பர்கள் குழு'(SelfSufficiency Scheme) மற்றும் அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றத்தினர் இணைந்து இந்த விழிப்புணர்வுத் திட்டத்தை அறிவித்துள்ளனர். அதன்படி,2026-2027ஆம் கல்வி ஆண்டிற்கான சேர்க்கையில் 6-ஆம் வகுப்பு மற்றும் 11-ஆம் வகுப்பில் முதலில் சேரும் தலா 40 மாணவர்களின் பெற்றோர்களுக்கு தலா ரூ. 2,500/- ஊக்கத்தொகையாக வழங்கப்படும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்புத் திட்டத்தின் தொடக்க நிகழ்வில், அனைத்து ஆசிரியர் கூட்டமைப்பு மாநில பொருளாளர் விசுவநாதன், உடற்கல்வி ஆசிரியர் காந்தி, பள்ளியின் தலைமை ஆசிரியர் பிச்சப்பிள்ளை, பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மாணவர் சேர்க்கையைத் தொடங்கி வைத்தனர்.

அரசுப் பள்ளிகளில் கல்வி கற்பதன் அவசியத்தையும், முன்னாள் மாணவர்களின் இந்த அர்ப்பணிப்பையும் பாராட்டிய அவர்கள், கிராமப்புறமாணவர்கள் இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி அரசுப் பள்ளியில் சேர்ந்து பயன்பெற வேண்டும் என வலியுறுத்தினர்.

முன்னாள் மாணவர்களின் இந்தஅதிரடி மற்றும் நெகிழ்ச்சியான முயற்சி அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப்பெற்றுள்ளது.



## கோவை மாவட்டம் சோமையனூரில், நேதாஜி மக்கள் இயக்கம் சார்பாக நடைபெற்ற, சிலம்ப திருவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பல்வேறு திறமைகளை வெளிப்படுத்திய மாணவ, மாணவியர்கள்

மாவீரர்நேதாஜிசுபாஷ் சந்திர போஸின், 129வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாவட்டம், கணுவாய் அடுத்த சோமையனூரில், நேதாஜி மக்கள் இயக்கம் சார்பாக, மாபெரும் சிலம்ப திருவிழா மற்றும் சிலம்ப போட்டிகள் நடைபெற்றது. சிலம்பப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை, ஆதித்யா சிலம்ப பாசறை நிறுவனரும், தலைமை ஆசானுமாகிய எம்.எஸ்.ஆர் முத்து பாண்டியும், ஆதித்யா ஆர்ட்ஸ் அண்ட் ஸ்போர்ட்ஸ் தலைவர் எம். பாண்டியராஜனும் ஏற்பாடு செய்திருந்தனர். சிலம்பபோட்டிகள் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.இதற்கான நடுவர்களாக ஏடிஎஸ் ஸ்போர்ட்ஸ் சாமிக்கண்ணு,மாஸ்டர் அகத்தியர் சிலம்ப கலைக்கூடம் கார்த்திக் ராஜா, மாஸ்டர் நித்யா, பயிற்சியாளர் ஏஞ்சல், அகடாமி கணேஷ்குமார், மாஸ்டர் நாச்சியார் சிலம்ப அகடாமி வேல்மணி, மாஸ்டர் ஏஞ்சல் அகடாமி கன்னியப்பன், மாஸ்டர் பாரதியார் அகடாமி யாழினி, மாஸ்டர் ஆதித்யா சிலம்பப் பாசறை பயிற்சியாளர்கள் சரண், அரவிந்தன், கோகிலா ஸ்ரீ, ஆகியோர் நடுவர்களாக பணியாற்றி மாணவர்களின் திறன் களுக்கு மதிப்பெண்கள் தந்தனர்.

இந்த விழாவில் கலைநிகழ்ச்சியாக புலி வேடமிட்டு ஆதித்யா சிலம்ப பாசறையின், புலி குட்டிகள் மிதிலேஷ், முஜாமல், சபரி, மித்திரன், ஆகியோரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். போட்டியிலும் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்ட சிலம்ப வீரர் வீராங்கனைகளுக்கு நேதாஜி மக்கள் இயக்க நிர்வாகிகள், மற்றும் மாநில பொதுச் செயலாளர் நேதாஜி சே போத்திராஜ் ஆகியோர் பாராட்டி வெற்றி பதக்கங்களும், சான்றிதழ்களும், கோப்பைகளும், வழங்கி பாராட்டினர். தொடர்ந்து

ஆதித்யா சிலம்ப பாசறை தலைமையாசன் முத்துபாண்டிக்கு, நேதாஜி மக்கள் இயக்கத்தின் சார்பாக, மாவீரர் சுபாஷ் சந்திர போஸ் விருது வழங்கி பெருமை படுத்த பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெப்பாலம்பட்டி காலனியில் கழிவுநீர் வடிகால் அமைப்பை அமைக்க கிராம மக்கள் எதிர்ப்பு கழிவுநீர் பாதையை குடியிருப்பு பகுதிக்குள் திருப்பி விட கோரிக்கை வைத்ததால் சர்ச்சை



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த வெப்பாலம்பட்டி கிராமத்தில் உள்ள வெப்பாலம்பட்டி காலனி குடியிருப்பு பகுதியில் ரூ.5.75 லட்சம் மதிப்பில் புதிய கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி கடந்த மூன்று மாத காலமாக நடைபெற்று வருகிறது. சுமார் 30க்கும் மேற்பட்ட குடியிருப்பு வீடுகள் கொண்ட காலனி பகுதியில் இருக்கும் கழிவுநீர் அனைத்தும் சாலையோரம் தேங்குவதை தடுக்க அந்த இடத்தில் புதிய வெர்டிகல் பில்டர் எனப்படும் வடிகால் அமைப்பை அமைக்க ஒப்பந்ததாரர் நடவடிக்கை மேற்கொண்ட நிலையில், இதனை அப்பகுதி காலனி மக்கள் தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. வடிகால் அமைப்பை மேற்கொண்டால் கழிவுநீர் அதே இடத்தில் தேங்கி ஊறி கிராம மக்களுக்கு சுகாதார பாதிப்புகளை ஏற்படுத்தும் எனக் கூறியதோடு, மழை நீர் செல்லக்கூடிய வழிபாதையில் கழிவு நீரை திருப்பி விட கோரிக்கை வைத்தனர். ஆனால் மழைநீர் செல்லும்வழி பாதையில் வேற்று சமூக மக்களின் குடியிருப்பு வீடுகள் அமைந்துள்ளதால், அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தனர். இதன் காரணமாக கிராமத்தில் சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது. இதனையடுத்து நிகழ்விடத்திற்கு வந்த வெப்பாலம்பட்டி கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயலாளர், மற்றும் போச்சம்பள்ளிகாவல்துறையினர் கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி பர்கூர் வட்டார வளர்ச்சி அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு வடிகால் அமைப்பு குறித்து காலணி மக்களுக்கு விரிவாக எடுத்துரைத்து அதன் பிறகு நடவடிக்கை மேற்கொள்வோம் எனக் கூறியதை அடுத்து கூட்டத்தினர்கலைந்துசென்றனர்



சேலத்தில் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் மஹாலில் "TECWA 2026" தமிழ்நாடு கல்வி ஆலோசகர்கள் நல சங்கம் சார்பாக அகில இந்திய கல்வி ஆலோசகர்கள் மற்றும் அனைத்து முன்னணி கல்வி நிறுவனங்களின் 100க்கும் மேற்பட்ட கல்வி கண்காட்சி அரங்குகள் மற்றும் 50க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள், 500க்கும் மேற்பட்ட கல்வி ஆலோசகர்கள் சந்திப்பில் TECWA அமைப்பின் நிறுவனர் M.ஆறுமுகம் மற்றும் நிர்வாகிகள் உட்பட ஈரோடு மாவட்ட பேராசிரியரும் ,கல்வி நல ஆலோசகருமான G தங்கவேல் உட்பட கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## வாக்காளர் விழிப்புணர்வு ரங்கோலி போட்டி

வாக்காளர் தின ரங்கோலி போட்டியில் வெற்றி பெற்றோர்க்கு சப் கலெக்டர் பரிசு வழங்குதல்

மாணவிகளுடன் மாணவர்களும் வாக்காளர் விழிப்புணர்வு கோலம் போட்டு அசத்தல்தேவகோட்டை- சிவகங்கை மாவட்டம் தேவகோட்டைசேர்மன்மாணிக்கவாசகம்நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான கோலப்போட்டிகளுடன் தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டது .



இப்பள்ளியில்தொடர்ந்துபதிமூன்றாவதுஆண்டாக தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் தேவகோட்டை வட்டாட்சியர் சேது நம்பு, சிறப்பு வட்டாட்சியர் ஜெயநிர்மலா , பள்ளி தலைமையாசிரியர் லெ .சொக்கலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் . ஆசிரியர் ஸ்ரீதர் வரவேற்றார் .தேவகோட்டை சப் கலெக்டர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ் தலைமை தாங்கி பேசுகையில்,பள்ளி மாணவர்கள் அனைவரும் உங்கள் அண்ணன் அக்காவிடம் கூறி வாக்களிக்க சொல்லுங்கள்.

வாக்காளர் என்பது 18 வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும்.

நம்முடையவகுப்பில்ஒருதலைவரைதேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் ஆசிரியர் தான் முடிவு செய்து தேர்ந்தெடுப்பார்கள்.

மாணவர்கள் அனைவரும் சேர்ந்து வகுப்பில் ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் மாணவர்கள் அதிகமாக யார் பெயரை தேர்ந்தெடுக்கிறார்களோ , அவர்கள்தான் அந்த வகுப்பின் தலைவர். நம் நாட்டிற்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுப்பது மக்கள்தான். மக்களாகிய நாம் அனைவரும் ஓட்டு போட்டால் தான் நம் நாட்டின் தலைவரை தேர்ந்தெடுக்க முடியும்.

முன்னதாக வாக்காளர் உறுதி மொழியை தேவகோட்டை சப் கலெக்டர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ் உட்பட மாணவர்களும் ,ஆசிரியர்களும் ,பெற்றோர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். நிகழ்வில் தேவகோட்டை தேர்தல் துணை வட்டாட்சியர் சிவக்குமார் உட்பட ஏராளமான பெற்றோர்களும் பங்கேற்றனர். வாக்காளர் விழிப்புணர்வுதொடர்பானகவிதை,பேச்சுபோட்டியில் மாணவிகள் நந்தனா, ரித்திகா ஆகியோர் பரிசு பெற்றனர். ரங்கோலி போட்டியில் மாணவிகளுடன் மாணவர்களும் கோலம் வரைந்து அசத்தினார்கள். சுமார் 25-க்கும் மேற்பட்ட கோலங்கள் போடப்பட்டன. ஆசிரியை முத்துலெட்சுமி நன்றி கூறினார்.

## வேப்பூர் டாஸ்மாக்கில் பகல் கொள்ளை: பாட்டிலுக்கு ரூ.20 கூடுதல் வசூல் போலி ஊழியர்களால் அரங்கேறும் முறைகேடு!

கடலூர் மாவட்டம் வேப்பூர் பகுதியில் உள்ள அரசு மதுபானக் கடைகளில், நிர்ணயிக்கப்பட்ட விலையை விட பாட்டிலுக்கு 20 ரூபாய் வரை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், போலி ஊழியர்களைக் கொண்டு முறைகேடுகள்



அரங்கேறுவதாகவும் எழுந்துள்ள புகார் மது பிரியர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வேப்பூர் லேனா திருமண மண்டப பின்புறம் உள்ள கடை எண் 2685 மற்றும் ஆஞ்சநேயர் கோவில் எதிரே உள்ள கடை எண் 2686 ஆகிய இரண்டு டாஸ்மாக் கடைகளிலும் இந்த விதிமீறல்கள் தொடர் கதையாகி வருகின்றன. இங்கு விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு குவாட்டர் மற்றும் பீர் பாட்டிலுக்கும் கூடுதலாக 10 ரூபாய் கட்டாயமாக வசூலிக்கப்படுகிறது.இதுதவிர,காலி பாட்டில்களைத் திரும்பப் பெற்று 10 ரூபாய் வழங்கும் திட்டத்தின் கீழ், பாட்டில்களில் ஒட்டப்படும் ஸ்டிக்கருக்காக மேலும் 10ரூபாய் கூடுதலாகப் பறிக்கப்படுகிறது.இதன் மூலம் ஒருபாட்டிலுக்குமொத்தம்20ரூபாய்வரைசட்டவிரோத வசூல் வேட்டையில் ஊழியர்கள் ஈடுபட்டு வருவதாக மது பிரியர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தக் கடைகளில் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும்விற்பனையாளர்கள், கடையைத் திறப்பதோடு தங்களது பணி முடிந்துவிட்டதாகக் கருதிச் சென்றுவிடுவதாகவும், விற்பனைப் பணிகளில் வெளியாட்களே ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு பணியமர்த்தப்படும் உள்ளூர் ஊழியர் தங்களது தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி எவ்வித அச்சமுமின்றி முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த மதுபான கடைகளில் முறையான அரசு ஊழியர்கள் இல்லாததால்மதுபானஇருப்புகணக்கில் குளறுபடி ஏற்படுவதுடன், போலி மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதற்கான அபாயமும் உள்ளதாக மதுப்பிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர். மேலும், உயர் ரக மதுபானங்களுக்குஅரசு நிர்ணயித்தவிலையைவிடப் பன்மடங்கு கூடுதல் விலை நிர்ணயித்து, ரசீது வழங்காமல் விற்பனை செய்வதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

உள்ளூர் அதிகாரிகளின் மெத்தனப் போக்கைப் பயன்படுத்தித்தொடரும்இந்தப்பகல்கொள்ளையைத் தடுக்க, மாவட்ட நிர்வாகமும் டாஸ்மாக் உயர் அதிகாரிகளும் உடனடியாகத் தலையிட வேண்டும். விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து, கூடுதல் விலை வசூலிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே அப்பகுதி மதுபிரியர்களின் கோரிக்கையாக உள்ளது.

# அ.ம.மு.க. மற்றும் பிற கட்சிகளை சார்ந்த 200க்கும் மேற்பட்டோர் அமைச்சர் கீதாஜீவன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்





திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் முன்னிலையில் கடந்த 23ம் தேதி அம்மா மக்கள் முன்னேற்றக்கழக துணைப் பொதுச்செயலாளர் மாணிக்கராஜா அக்கட்சியிலிருந்துவிலகிசென்னை அறிவாலயத்தில் திமுகவில் இணைந்தார்.

இந்நிலையில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் முன்னிலையில் மாணிக்கராஜா தலைமையில் கயத்தாறு கடம்பூர் பகுதியைசேர்ந்தஅமமுகவை சேர்ந்த நிர்வாகிகள் 200 பேர் போல்பேட்டை கீதா மேட்ரீக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அ.ம.மு.க மற்றும் பிற கட்சியிலிருந்து திமுகவில் இணையும் விழாவில் 200 பேர்அமைச்சர்கீதாஜீவன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். ஆண்களுக்கு கருப்பு சிவப்பு வேஷ்டி, துண்டும், பெண்களுக்கு சேலையும் கருப்பு சிவப்பு துண்டும் வழங்கினார்.

தொடர்ந்து அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில் சில தினங்களுக்கு முன்பு சென்னையில் முதலமைச்சர் முன்னிலையில் இணைந்த மாணிக்கராஜா கடம்பூர் கயத்தாறு பகுதியை சேர்ந்த 200க்கும் மேற்பட்டோரை கட்சியில் இணைத்துள்ளார். முதலமைச்சர் இணைத்து கொண்ட வழியில் வடக்கு மாவட்ட திமுக உங்கள் அனைவரையும் அரவணைத்து வழிநடத்தி செல்லும் மாணிக்கராஜா தலைமை பண்பு கொண்டவர் எல்லோரையும் அரவணைத்துசெல்வதிலும் நல்லவர் தாய்கழகத்தில் இணைந்துள்ள அனைவரையும் மனதாரவரவேற்று உங்களது கடமையை முதலமைச்சரின் லட்சியத்தை நிறைவேற்றும் வகையில் அமையவேண்டும்.என்று பேசினார்.

மாணிக்கராஜா பேசுகையில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் ஜாதிமதம் பார்க்காமல் அனைவருக்குமான ஆட்சியை சிறப்பாக செய்து வருகிறார். அதனை ஏற்று திமுகவில் இணைந்துள்ளோம் தூத்துக்குடி மாவட்டத்தில் அண்ணாச்சி பெரியசாமி இருந்த காலத்தில் நான் அவர்களோடு நட்புறவாக இருந்தேன், 96ம் ஆண்டில் நான் சுயேட்சையாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய காலத்தில் இப்போதைய அமைச்சர் அப்போது மாவட்ட ஊராட்சி மன்ற தலைவராக இருந்த காலத்தில் நான் வைத்த அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி கொடுத்தார்கள். இடைப்பட்ட காலத்தில் அனைவரிடமும் சகோதரனாக பழகி வந்தோம். ஆனால் பெரியசாமி அண்ணாச்சியை போல் எல்லா வகையிலும் சிரித்த முகத்தோடும் அனைவரையும் அதே வழியில் அரவணைத்து சென்று பாகுபாடு இல்லாமல் பழகுவது இயல்பான செயலாக அமைய பெற்றுள்ளது. சற்று உடல்நலம் குன்றி இருந்த நேரத்தில் பெரியசாமி அண்ணாச்சி என்னிடம் தொடர்பு கொண்டு பேசிய நேரத்தில்நான்எவ்வளவுகாலம் இருப்பேன் என்று தெரியாது என்னுடைய மறைவிற்கு பின்பு எனது மகளுக்கு நீ துணையாக இருக்க வேண்டும் என்று அப்போதே கேட்டுக்கொண்டார். எனக்கு அமைச்சர் கீதாஜீவன் எப்போதும் சகோதரி தான் அதில் மாற்றுக்கருத்து கிடையாது கயத்தாறு கடம்பூர் பகுதியில் எல்லோரிடமும் நட்பாக பழகி இருந்த நான் இப்போது அனைவரிடத்திலும் உடன்பிறப்பாகியுள்ளேன். கோவில்பட்டி தொகுதியில் தலைவர் யாரை வேட்பாளராக நிறுத்தினாலும் முழுமனத்தோடு வெற்றிக்காக முழுமையாக உழைப்பேன். என்று பேசினார்.

மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஐயாத்துரைபாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் சின்னப்பாண்டியன், கருப்பசாமி, கோவில்பட்டி தொகுதி பொறுப்பாளர் கணேசன், மாவட்ட வர்த்தகஅணி அமைப்பாளர் விஸ்வநாத்ராஜா, பகுதி செயலாளர் ஜெயக்குமார், மாநகரஇளைஞர் அணி அமைப்பாளர் அருண்சுந்தர், துணை அமைப்பாளர் ரவி, மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், மாவட்ட துணைச்செயலாளர் வக்கீல் செல்வக்குமார், கோவில்பட்டி செல்லத்துரை, மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் செந்தில்குமார், பொறியாளர் அணி செயலாளர் கார்த்திக்கேயன், இலக்கிய அணி செயலாளர் பாலா, ஜெ பேரவை செயலாளர் இலட்சம், எம்.ஜி. ஆர் இளைஞர் அணி இணைச்செயலாளர் பத்திரகாளிமுத்து, துணைச்செயலாளர் சாமுவேல், ஒன்றிய செயலாளர்கள் மகேந்திரன், அவைத்தலைவர் மாரியசூசை, இணைச்செயலாளர் கஸ்தூரி, ஒன்றிய ஜெ பேரவை உத்தண்டுராஜ், ஊராட்சி மன்ற தலைவர்கள் நாராயணன், செல்லையா, கருப்பசாமி, முத்துலட்சுமி, பால்ராஜ், விஜயகுமார், துரை வீரலட்சுமி, தனலட்சுமி, பிச்சைக்கனி, மாரியசூசை, மகேந்திரன், வள்ளி, பேரூர் செயலாளர்கள் கோபி என்ற பேச்சிமுத்து, காந்தையா, பாண்டியன், கனகவேல், ஆறுமுகம், இசக்கிமுத்து கோபி, மாநகர் மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் திருமலைதர்மர், எம்.ஜி.ஆர் இளைஞர் அணி துணைச்செயலாளர் மணிகண்டன், கிளைச்செயலாளர்கள் வியாகப்பராஜ், கருப்பசாமி, ராஜகோபால், பூமாரியப்பன், செல்வக்குமார், ராதாகிருஷ்ணன், வீரபாண்டி, கண்ணன், மணிகண்டன், ராஜதுரை, செந்தில்வேல், முருகன், மிக்கேல்சாமி, மாரிச்சாமி, எட்வர்ட், முருகன், சங்கலிங்கமுருகன், மாரியப்பன், தங்கராஜ், வேல்ராஜ், முத்தரசன், முத்துராஜ், துரை, பேரூர் நிர்வாகிகள் தர்மராஜ், கனகவேல், நரசிம்மன், மாரிச்செல்வன், செல்வக்குமார், வைரம், ஆறுமுகச்சாமி, காளிமுத்து, தர்மர், மாரிமுத்து பாண்டியன், வெங்கடேஷ், சிவா, மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார், பெருமாள் கோவில் அறங்காவலர் குழுதலைவர் செந்தில்குமார், வட்டப்பிரதிநிதி பாஸ்கர், மற்றும் மணி, அல்பட், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## ஈரோடு பெருந்துறை விசிக புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்: மாநில நிர்வாகிகள் பங்கேற்பு

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் புதிய நிர்வாகிகள் அறிமுகக்கூட்டம்மிகச்சிறப்பாக நடைபெற்றது. பெருந்துறை சட்டமன்ற தொகுதி மாவட்டச்செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கட்சியின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் வெ.கனியமுதன் மற்றும் வழக்கறிஞர்பிரிவுமாநிலச் செயலாளர் காஞ்சி த.பார்வேந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று, புதிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி வாழ்த்துரை வழங்கினர். குறிப்பாக பெருந்துறை சட்டமன்ற தொகுதிக்கு மாவட்டச் செயலாளராக வி.விஜயபலனை நியமனம் செய்தமைக்காக விசிக தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., அவர்களுக்கு நன்றி தெரிவித்து வி.விஜயபாலனுக்கு மாலை அணிவித்து மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் உற்சாகத்துடன் வாழ்த்து தெரிவித்தனர். மேலும் இந்த நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர்கள் எஸ். எம்.சாதிக், வி.கமலநாதன், ஏ.பி.ஆர்.மூர்த்தி, மண்டல துணைச்செயலாளர் மிசா தங்கவேல் மற்றும் வழக்கறிஞர் சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெருந்துறை ஒன்றியச் செயலாளர் சி.அண்ணாமலை அனைவரையும் வரவேற்றார். முன்னதாக அண்ணல் அம்பேத்கர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தொழிலாளர் விடுதலை முன்னணி மாவட்ட அமைப்பாளர் ஆட்டோ பாபு மற்றும் மகளிர் அணியைச் சேர்ந்த ஜூலியட் வின்சிலி, கவிதா, ஈஸ்வரி, அந்தியூர் தீபா ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும், முக்கிய நிர்வாகிகளான மருதாச்சலம், தேவராஜ், கிருஷ்ணமூர்த்தி, ஒலகடம் வெங்கடேஷ், மணியம்பாளையம் குமார், சென்னிமலை நவீன், ரமேஷ் வீரன் உள்ளிட்ட திரளான கட்சித் தொண்டர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். விழாவின் நிறைவாக நகரத் துணைச் செயலாளர் அ. ஜெகதீசன் நன்றியுரை ஆற்றினார்.

## தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு நிறுவன தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் கோரிக்கை மனு வழங்கினார்



தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு நிறுவன தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தென்காசி மாவட்ட நெடுஞ்சாலைத் துறை கோட்ட கண்காணிப்பாளர் டைட்டஸ் அவர்களிடம் அனந்தபுரம் ரயில்வே கேட் இருபுறங்களிலும் ரோடானது உள்வாங்கி விட்ட காரணத்தினால் உடனடியாக சரி செய்ய வேண்டும் என்று கோரிக்கை மனு கொடுத்தார்கள் அந்த மனுவில்

தென்காசி மாவட்டம் செங்கோட்டை சுரண்டை ரோட்டில் அமைந்துள்ள அனந்தபுரம் ரயில்வே கேட் அமைந்துள்ளது. இந்த ரயில்வே கேட்டுக்கு கீழ்புறமும் மேல்புறமும் ரோடானது சரிந்து விட்டது. ரோட்டுக்கு மத்திய பகுதியும் பள்ளமாக உள்வாங்கிக் கொண்டிருக்கிறது. தற்போது ரோட்டுக்கு மத்தியில் மணல் மூட்டைகளையும் தடுப்புகளையும் கடந்த மூன்று மாத காலமாக வைத்திருக்கிறார்கள். தற்போது ரோடானது முற்றிலுமாக உள்வாங்கி கொஞ்சம் கொஞ்சமாக பள்ளம் ஏற்பட்டு வருகிறது. ரயிவே கேட்டுக்கு கீழ்புறம் முற்றிலுமாக ரோடு இறங்கிவிட்டது. அதனால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது மாலை நேரங்களில் ஒருமுறை கேட் அடைத்தால் அந்த வழியாக வருகின்ற வாகனங்கள் ரயில்வே கேட்டை கடப்பதற்கு முக்கால் மணி நேரத்திற்கும் மேலாக ஆகிறது. தற்போது முக்கால் மணி நேர இடைவேளையில் வேறு ஏதாவது ஒரு ரயில் வருமேயானால் கேட்டு அடக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு மிகப்பெரிய விபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகி இருக்கிறது. தினந்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளிவாகனங்கள் இந்த வழியாக செல்கிறது நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் இந்த வழியாக செல்கிறது நூற்றுக்கும் மேற்பட்ட பேருந்துகள் செல்கிறது 500க்கும்மேற்பட்டலாரிகள் அளவுக்கு அதிகமான பாரத்தோடு கனிம வளங்களை கேரளாவுக்கு ஏற்றி செல்கின்றன. தற்போது ரயில்வே கேட்டுக்கு கீழ்புறம் முற்றிலுமாக ரோடு உள்வாங்கி விட்டது இன்னும் பத்து நாட்கள் தொடர்ந்து நீடித்தால் இந்த வழித்தடத்தை முற்றிலுமாக மூட வேண்டிய ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது பள்ளி வாகனங்கள் பேருந்துகள் மற்ற வாகனங்களில் செல்லும் மக்களுக்கு பெரும் விபத்து ஏற்படுவதற்கு முன்னால் இந்த ரோட்டை சரி செய்ய வேண்டும் இன்னும் பத்து நாட்களுக்குள் இதற்கான பணியை தொடங்க விட்டால் மிகப்பெரியவிபத்துக்கள் ஏற்படுவதற்கானவாய்ப்புகள் இருக்கிறது முற்றிலும் ரோட்டை அடைக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுயிருக்கிறது அதனால் அனந்தபுரம் ரயில்வே கேட் பகுதியில் உள்ள ரோட்டை உடனடியாகசரிசெய்யவேண்டும் என்றும் பெரும் விபத்துக்கள் ஏற்பட்டால் இதற்கு நெடுஞ்சாலை துறையே முழு பொறுப்பேற்க வேண்டும் என்றும் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார் மேலும் இது சம்பந்தமாக தென்காசி மாவட்ட கோட்ட பொறியாளர் அவர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும்செங்கோட்டை உதவி கோட்ட பொறியாளர் அவர்களுக்கும் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் இன்று மனு அனுப்பி உள்ளார்



ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (28.01.2026) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து மாவட்டக்காவல்கண்காணிப்பாளர்A.சுஜாதாபொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று மனு மீது விசாரணையை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## பனியன் ஜவுளி வியாபாரிகள் சங்கத் தேர்தல்: செயலாளர் வேட்பாளர் அரிமா அன்பழகன் வாக்குசேகரித்தார்



ஈரோடு:

ஈரோடு பனியன் ஜவுளி வியாபாரிகள் சங்கத் தேர்தல் களம் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில், செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் ஸ்ரீ பாலமுருகன் டெக்ஸ் உரிமையாளர் அரிமா அன்பழகன் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். ஈரோட்டில் நடைபெற்ற வாராந்திர ஜவுளி சந்தைக்கு நேரில் சென்ற அவர், அங்கு திரண்டிருந்த நூற்றுக்கணக்கான வியாபாரிகளைச் சந்தித்து தனக்கு ஆதரவு கோரி வாக்கு சேகரித்தார். சங்கத்தின் எதிர்கால வளர்ச்சி, வியாபாரிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஜவுளித் தொழிலில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கான ஆக்கப்பூர்வமான வாக்குறுதிகளை அவர் முன்வைத்தார்.

நேரிடையாக வியாபாரி களிடம் குறைகளைக் கேட்டறிந்தபடி அவர் மேற்கொண்ட இந்தத் தீவிரப் பிரச்சாரம், ஜவுளி சந்தை வியாபாரிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதுடன், தேர்தல் களத்தில் பெரும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தி யுள்ளது.

## ஈரோடு 40வது வார்டு திமுக இளைஞரணி துணை அமைப்பாளராக ஆர்.லட்சுமி பிரசாத் கோத்தாரி(லக்கி) நியமனம்



திமுக இளைஞ ரணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழகப் பணிகளை வலுப்ப டுத்த புதிய நிர்வாகி களை நியமித்து ள்ளார். அதன்படி, 40-வது வார்டு இளைஞ ரணி துணை அமைப்பா ளராக ஆர். லட்சுமி பிரசாத் கோத்தாரி (லக்கி) நியமிக்கப்ப ட்டுள்ளார். உடனடி யாக அமலுக்கு வரும் இந்த நியமனத்தைத் தொடர்ந்து, கழக விதிகளுக்கு உட்பட்டு அர்ப்பணிப்புடன் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்புதியபொறுப்பிற்கு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் லட்சுமி பிரசாத் கோத்தாரிக்கு (லக்கி) தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

## ஈரோடு நசியனூரில் ஆதித்யா சித்த வைத்திய சாலை திறப்பு விழா

ஈரோடு மாநகர் நசியனூரில் பழைய கோவை - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் ஆதித்யா சித்த வைத்தியசாலைதிறப்பு விழா நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த மருத்துவமனையில் சிறப்பாக தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் , கை, கால், இடுப்பு வலிகளுக்கு உண்டான வர்ம சிகிச்சை கள், மகளிர் காண மாதவிடாய் பிரச்சனைகள், குழந்தையின்மை போன்ற அனைத்து சிகிச்சைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட உள்ளது. நசியனூர் ஆரம்பசுகாதார நிலைய சித்த மருத்துவர் டாக்டர். சுந்தரராஜ் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நசியனூர் ஏ.எம் ஸ்டுடியோ போட்டோ மோகன் ,சித்தோடு முன்னாள் பேரூராட்சி தலைவர் வரதராஜன், நசியனூர் முன்னாள் பேரூராட்சி கவுன்சிலர் நாகராஜ், நசியனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி இயக்குனர் வெங்கடேஷ், டாக்டர். M .அருணா தேவி மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு இந்த நிகழ்வை சிறப்பித்தனர்.








ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (28.01.2026) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஓடத்துறை சோமசுந்தரம் நினைவு அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசின் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மருத்துவர் ஓ.என். பரமசிவன் 51 சதவீதம் பங்களிப்புத் தொகை மற்றும் அரசின் பங்களிப்புத் தொகையும் சேர்த்து கட்டப்பட்ட புதிய பள்ளி வகுப்பறை கட்டிடத்தினை திறந்து வைத்து, மரக்கன்றினை நட்டு வைத்தார்.உடன் முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி
## தமிழ்நாடு அரசின் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சோமசுந்தரம் நினைவு அரசு மேல்நிலைப்பள்ளியின் புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தார்



ஈரோடு மாவட்டம், பவானி ஓடத்துறையில் நேற்று (28.01.2026) தமிழ்நாடு அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.2.50/- கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சோமசுந்தரம் நினைவு அரசு மேல்நிலைப்பள்ளியின் புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசின் நமக்கு நாமே திட்டம் என்பது பொதுமக்களின் பங்களிப்புடன் ஊரக மற்றும் நகர்ப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம், 1/3 பங்கு பொதுமக்களின் நிதி/உழைப்பு மற்றும் 2/3 பங்கு அரசின் நிதி உதவியுடன், பூங்காக்கள், சாலைகள், நூலகங்கள் போன்ற பொதுச் சொத்துக்களை உருவாக்க வழிவகுக்கிறது. நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கே.எம்.சி.ஹச்.

மருத்துவமனையின் எலும்பு முறிவு மற்றும் மூட்டு மாற்று அறுவைச்சிகிச்சை நிபுணரும், கோவை கொங்குநாடு தலைமை கலை அறிவியல் கல்லூரியின் பொருளாளருமான மருத்துவர் .ஓ.என்.பரமசிவன் அவர்களின் 51 சதவீதப் பங்களிப்புத் தொகைரூ.1,27,50,000/- மற்றும் அரசின் பங்களிப்புத் தொகை ரூ.1,22,50,000/-சேர்த்து மொத்தம் ரூ.2,50,00,000/- மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தினை திறந்து வைத்து, பார்வையிட்டார். தொடர்ந்து, புதிய பள்ளி கட்டிடத்தின் வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி, முன்னாள் தமிழ்நாடு சட்டமன்ற செயலர் மற்றும் ஆணையர் சி.கே.இராமசாமி, மரு. சி.ஏ.வாசுகி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள். மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உளுந்தூர்பேட்டை நகராட்சியில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த
## ரூ.30 கோடி 25 லட்சம் செலவில் நடைபெற்று வரும் பணிகளை நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்கு நகராட்சி நிர்வாகத்தின் மூலம் கெடிலம் ஆறு, மட்டிகை, வானாம்பட்டு ஆகிய கிராமங்களில் ஆழ்துளை கிணறு அமைத்துசுமார்25கிலோ மீட்டர் தூரம் பூமிக்கு அடியில் ராட்சத குடிநீர் அமைத்து உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு குடிநீர் கொண்டு வந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய ரூபாய் 30 கோடியே 25 லட்சம் கலைஞர் நகர மேம்பாட்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதியின் கீழ் குடிநீர் வசதியை மேம்படுத்தும் வகையில் ராட்சத குழாய்கள் அமைக்கும் பணி இன்று கெடிலம் ஆற்றில் பூமி பூஜை செய்து நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசுதாமியில் பணிகள் தொடங்கப்பட்டது நகராட்சி ஆணையர் புஸ்ரா மற்றும்நகரமன்றஉறுப்பினர்கள் நகராட்சி ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் எம்பி தேர்தலில் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டேன்: விஜயபிரபாகரன் பேச்சு



சிவகாசி: விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் நேற்று பிரேமலதா விஜயகாந்த் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவருடன் வந்த மகன் விஜயபிரபாகரன் பேசுகையில், "சிவகாசி எனக்கு ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே இங்கே எம்பி தேர்தலில் 60 நாள் தங்கி பிரசாரம் செய்துள்ளேன். சிவகாசி மக்கள் இப்போதும்என்னை அன்பாக வரவேற்பதை காண முடிகிறது. தேர்தலில் வேண்டும் என்றால் நான் தோல்வி அடைந்திருக்கலாம். எம்பி தேர்தலில் கடுமையாக உழைத்தோம். இது மக்களாகிய உங்களுக்கு தெரியும். யார் வெற்றி பெற்றார் என்றும் தெரியும். எம்பி தேர்தலில் சிவகாசி தொகுதியில் தான் சில ஆயிரம் வாக்குகள் பின்னடைவு என்று கூறினர்.

ஏன் பின்னடைவு என்று இப்போது எனக்கு தெரிகிறது. தோல்வியின் சூழ்ச்சி என்னவென்று இப்போது எனக்கு தெரிகிறது. ஏன் இதை சொல்கிறேன் என்றால் 2006ல் சிவகாசி தொகுதியில் தான் தேமுதிக அதிகமான வாக்குகள் பெற்றது. 2024ல் ஏன் வாக்குகள் வரவில்லைஎன்றால் இப்போது எனக்குப் புரிகிறது. தேர்தல் பிரசாரத்தின் போது எத்தனையோ பட்டாசு தொழிலாளர்களை பார்த்து இருக்கிறேன். வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். மீண்டும் இந்ததொகுதியில்தேமுதிக உழைக்க தயாராக உள்ளது. தேர்தலில் தேமுதிக எந்த கூட்டணியில் இடம் பெறுகிறதோ அந்த கூட்டணி தான் ஆட்சி அமைக்கும். சிவகாசி மக்கள் என்னை எப்போதும் கைவிட மாட்டார்கள்" என்றார்.

## "India Came Out On Top": Trump Aide Says Trade Deal With EU Favours Delhi



As India and the European Union announced a free trade agreement after nearly two decades of negotiations, the Donald Trump administration in the United States believes the deal appears to be favouring New Delhi by opening wider access to the European market. According to Trump's trade representative, Jamieson Greer predicted that India was "going to have a heyday" once the deal is implemented.

"I think India comes out on top on this. Frankly, they have more market access into Europe," Greer said while talking to Fox Business on Tuesday.

Talking about the terms of the proposed agreement, the US official said, "It sounds like they (India) have some additional immigration rights. I don't know for sure, but President von der Leyen of the EU has talked about mobility for Indian workers into Europe. So I think on net, India is going to have a heyday with this. They have low-cost labour."

Greer also appeared to take a dig at the EU and said, "It looks like the EU is doubling down on globalisation when we're trying to fix some of the problems with globalisation here in the US."

On India-US Trade Deal

Trump's trade representative also said India has more work to do to satisfy US concerns about its purchases of Russian oil and secure tariff relief. While New Delhi has "made a lot of progress" on curbing buys of Russian crude, "it's hard for them" to completely wean off the supplies because "they like the discount that you get from Russian oil," Greer said in the interview.

"I am in frequent contact with my counterpart in India. I have a great working relationship with him, but they still have a ways to go on this point," he said.

## சஞ்சய் காந்தி முதல்.. அஜீத் பவார் வரை.. விமான விபத்துகளில் பலியான பிரபலங்கள்!



தைவான் என அழைக்கப்படும் பகுதியில், கடந்த 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் தேதி நிகழ்ந்த விமான விபத்தில், சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மரணமடைந்ததாகக் கூறப்படுகிறது.

தரவுகளின்படி, இவர்தான், விமான விபத்தில் பலியான முதல் இந்திய அரசியல்தலைவராவார்.

மகாராஷ்டிர துணை முதல்வரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான அஜீத் பவார் பயணித்த விமானம் விபத்துக்குள்ளாகி அவர் பலியானார். அவர் உயிரிழந்ததை மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் உறுதி செய்தது.

விமான விபத்தில், விமானிகள் இருவர், அஜீத் பவாரின் பாதுகாப்பு அதிகாரி, உதவியாளர் உள்பட ஐந்து பேரும் பலியாகியிருக்கிறார்கள்.

தன்னுடைய சொந்த ஊரான புணே மாவட்டம் பாராமதியில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் பங்கேற்க, மும்பையிலிருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டார் அஜீத் பவார். அவர் சென்ற விமானம் இன்று காலை 8.45 மணியளவில் தரையிறங்க முயற்சித்தபோது, தரையில் மோதி விபத்துக்குள்ளாகி, விமானம் தீப்பிடித்தது. இதில் படுகாயமடைந்த அஜீத் பவார், உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

முதல்வராக இருந்தபோது மரணமடைந்தவர்கள்...

பிரிக்கப்படாத ஆந்திர மாநில முதல்வராக இருந்த ஒய்எஸ் ராஜசேகரரெட்டி கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த விமான விபத்திலும், அருணாசலப் பிரதேச முதல்வராக இருந்த தோர்ஜி காண்டு, கடந்த 2011ஆம் ஆண்டு நடந்த விமான விபத்திலும் பலியானவர்கள்.

முக்கிய அரசியல்வாதிகளை பலிகொண்ட விமான விபத்துகள்..

1973ஆம் ஆண்டு மே 31ஆம் தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு புது தில்லியில் தரையிறங்குவதற்கு சற்றுமுன் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதில், அப்போது மத்திய உருக்குத் துறை அமைச்சராக இருந்த மோகன் குமாரமங்கலம், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் கே. பாலதண்டாயுதம் உள்பட 48 பேர் உயிரிழந்தனர். விபத்து பற்றிய முழு விவரம்

மறைந்த பிரதமர் இந்திரா காந்தியின் இளைய மகனும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான சஞ்சய் காந்தி, புகழ்பெற்ற அரசியல் தலைவரான மாதவராவ் சிந்தியா, மக்களவைத் தலைவர் ஜி.எம்.சி. பாலயோகி,எஸ்.மோகன் குமாரமங்கலம், மத்திய இணையமைச்சர் என்விஎன் சோமு ஆகியோரும் விமான விபத்துகளில் பலியானவர்கள்.

கடந்த 1980, ஜூன் 23ஆம் தேதி, சஞ்சய் காந்தி சிறிய விமானத்தில் பயணித்த போது, தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் பலியானார். அவருக்கு அப்போது வயது 34. இந்த விமான விபத்து அப்போது நாட்டையே உலுக்கியது.

காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சருமான மாதவராவ் சிந்தியா, கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதி உத்தரபிரதேச மாநிலம் கான்பூருக்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றபோது செஸ்னா விமான விபத்தில் பலியானார்.

மக்களவைத் தலைவரும் தெலுங்கு தேசம் கட்சித் தலைவருமான ஜி.எம்.சி. பாலயோகி கடந்த 2002ஆம் ஆண்டு மார்ச் 3- அன்று ஆந்திரத்தில் நிகழ்ந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தார்.

குஜராத் முன்னாள் முதல்வரும் பாஜக தலைவருமான விஜய் ரூபானி, நாட்டையே உலுக்கிய ஏர் இந்தியா விமான விபத்தில் பலியானார்.

கடந்த2025ஆம்ஆண்டு ஜூன் 12அன்று அகமதாபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்திலிருந்து லண்டன் - கேட்விக் நோக்கி புறப்பட்ட சிறிது நேரத்திலேயே ஏர் இந்தியா விமானம் கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த ஒருவர் தவிர, 171 பேர் விபத்தில் பலியாகினர்.

இவர்கைத் தவிர முக்கிய பிரபலங்கள் சிலரும் விமான விபத்தில் பலியாகியிருக்கிறார்கள்.

இந்தியாவின் முப்படைகளின் முதல் தலைமை தளபதியாக பொறுப்பேற்ற விபின் ராவத், கடந்த 2021ஆம் ஆண்டு தமிழகத்தில் நிகழ்ந்த ஹெலிகாப்டர் விபத்தில் பலியானார். இதில், அவரது மனைவி மற்றும் 11 பேர் உயிரிழந்தனர்.

இந்தியாவின் அணுசக்தி திட்டத்தின் தந்தை என புகழப்படும் விஞ்ஞானி டாக்டர் ஹோமி ஜஹாங்கீர் பாபா, 1966ஆம் ஆண்டு ஜனவரி 24 அன்று ஏர் இந்தியா விமான விபத்தில் பலியானார்.

2005ஆம் ஆண்டு ஹெலிகாப்டர் விபத்தில், தொழிலதிபரும், ஹரியாணா அமைச்சருமான ஓம் பிரகாஷ் ஜிண்டால் தன்னுயிரை இழந்தார்.

1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசின் சூப்பர்-கிங் விமானம் மோசமான வானிலை காரணமாக விபத்துக்குள்ளானதில் பஞ்சாப் ஆளுநர் சுரேந்திர நாத் மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் பலியாகினர்.

தமிழ் உள்ளிட்ட பல மொழிகளில் முன்னணி நடிகையாக இருந்த சௌந்தர்யா, 2004ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதி பாஜக வேட்பாளர்களுக்காக ஆந்திர மாநிலத்தில் அரசியல் பிரசாரம் மேற்கொள்ள ஒற்றை என்ஜின் ஹெலிகாப்டரில் பயணம் செய்த போது, விபத்துக்குள்ளாகி மரணமடைந்தார்.

இவரது மரணம் திரையுலகினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. புதிதாக திருமணமாகி, கர்ப்பிணியாக இருந்த சௌந்தர்யா, ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கி உயிரிழந்தது அவரது ரசிகர்களை சொல்லொணாத் துயரத்துக்கு உள்ளாக்கியிருந்தது.

இந்திய வரலாற்றில், விமான விபத்துகளில் அரசியல்வாதிகள் மரணமடைவது அதிகமாக உள்ளது. ஒவ்வொரு முறையும் வானிலை, தொழில்நுட்பக் கோளாறு போன்றவை இதற்குக் காரணங்களாகக் கூறப்பட்டாலும், மற்றொரு பக்கம், மக்களிடையே சந்தேகங்கள் எழுவதும்தவிர்க்கமுடியாததாகவே உள்ளது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.